# எழுதிப் பழகுவோம்!

**கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்தல்.**

## 1. மழை

1. எனக்கு மழை நீரில் காகிதக் கப்பல் விட ஆசை.
2. மழைபெய்யும்போது இடியும் மின்னலும் தோன்றும்.
3. நான் மழை நீரில் விளையாடுவேன்.

## 2. அணிகலன்

1. அணிகலன்களை பெண்கள் விரும்புவர்.
2. அணிகலனுக்கு நகை, ஆபரணம் என்ற பெயர்களும் உண்டு.
3. அணிகலன்கள் அழகுக்கு அழகு சேர்க்கும்.

## 3. சிங்கம்

1. சிங்கம் விலங்குகளை வேட்டையாடி உண்ணும்.
2. சிங்கங்கள் கூட்டமாக வாழும்.
3. ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் மட்டுமே சிங்கங்கள் காணப்படுகின்றன.

## 4. தீ

1. தீ பழைய கற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
2. பஞ்சபூதங்களில் ஒன்று தீ.
3. தீயினை நெருப்பு என்றும் கூறுவர்.

## 5. ஓடு

1. நான் 300 மீட்டர் தூரம் ஓடுவேன்.
2. பேருந்தைப் பிடிக்க மூச்சிறைக்க ஓடினேன்.
3. திருடன் போலீசுக்கு பயந்து ஓடுவான்.